**தலைப்பு - 404 சீர்திருத்த, திறந்த பல்கலைக்கழகம் மற்றும் தொலைதூர கல்வி ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சு**

---

## 1. நிதிக் கூற்றுகள்

### 1.1 கணக்காய்வு அபிப்பிராயம்

நிதிக் கல்வி சீர்திருத்த, திறந்த பல்கலைக்கழகம் மற்றும் தொலைதூர கல்வி ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சின் 2021 ஆம் ஆண்டு திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றுகை கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றைக் கொண்டமைந்த 2021 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள் 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) உறுப்புரையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் 11 (1) பிரிவு பிரகாரம் கல்வி சீரமைப்பு, திறந்த பல்கலைக்கழகங்கள் மற்றும் தொலைதூர கல்வி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் நிதிக் கூற்றுகள் தொடர்பாக எனது கருத்துகள் மற்றும் அவதானிப்புகள் உள்ளடக்கிய சாராம்ச அறிக்கை 2022 மே மாதம் 31 ஆம் திகதி கணக்கு கொடுக்கும் அலுவலரிடம் வழங்கப்பட்டுள்ளது. கணக்காய்வு சட்டத்தில் 11 (2) பிரிவு பிரகாரம் இராஜாங்க அமைச்சிற்கு ஏற்புடையதான வருடாந்த விபரமான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 ஆகஸ்ட் 09 ஆம் திகதி கணக்கு கொடுக்கும் அலுவலரிடம் வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பில் 154(6) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 10 ஆவது பிரிவு பிரகாரம் இவ்வறிக்கை பாராளுமன்றத்திடம் சமர்ப்பிக்கப்படும்.

நிதிக் கூற்றுகளின் ஊடாக 2021 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆந் திகதியில் இராஜாங்க அமைச்சின் நிதிசார் நிலைமையினையும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான அதன் நிதி செயலாற்றினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு தரநியமம்படி (இ.க.த.நி) பிரகாரம் என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த கணக்காய்வு தரநியமம்படி எனது பொறுப்பு, இவ்வறிக்கையில் நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை வழங்கும் பொருட்டு என்னால் பெற்றுக்கொண்டுள்ள கணக்காய்வு சாட்சிகள் போதுமானதும் பொருத்தமானதெனவும் நம்புகின்றேன்.

### 1.3 நிதிக் கூற்றுகள் தொடர்பில் பிரதான கணக்கு கொடுக்கும் அலுவலரதும், கணக்கு கொடுக்கும் அலுவலரதும் பொறுப்பு

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்கவும் 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரமம் தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு கணக்கு கொடுக்கும் அலுவலரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் அதிகார சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தில் 38(1)(இ) உப பிரிவு பிரகாரம் இராஜாங்க அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டுக்காக பயனுள்ள உள்ளக கட்டப்பாட்டு முறைகளை தயாரித்து பராமரிக்கப்படுவதாக கணக்கு கொடுக்கும் அலுவலர் சான்றுப்படுத்தல் வேண்டுமென்பதுடன், அந்த முறைமையின் பயன் தொடர்பாக அவ்வப்போது மீளாய்வுகளை மேற்கொண்டு அதன்படி முறைமை பயனுள்ளதாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்களை செய்தல் வேண்டும்.

## 1.4 நிதிக் கூற்றுகளின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

-----------------------------------------------------------------------------------------------

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு அமைச்சின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

எனது கணக்காய்வில் அடையாளம் காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், பிரதான உள்ளக கட்டுப்பாட்டு குறைப்பாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக நிருவகிக்கும் தரப்புகளை தொடர்புகொள்கின்றேன்.

**1.5 ஏனைய சட்டத்துடனான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் 6(1)(ஈ) பிரிவு பிரகாரம் பின்வரும் விடயங்களை வெளிப்படுத்துகின்றேன்.

**(அ)** நிதிக் கூற்றுகள் கடந்த ஆண்டுடன் நேரொத்ததாகுமென்பது,

**(ஆ)** கடந்த ஆண்டுக்கு ஏற்புடையதாக நிதிக் கூற்றுகள் தொடர்பாக என்னால் மேற்கொண்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

**2. நிதிசார் மீளாய்வு**

**2. 1 செலவின முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கு வழங்கும் அலுவலரின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| **(அ)** மீளாய்விற்கான ஆண்டில் ஒதுக்கீடு செய்திருந்த தேறிய ஒதுக்கீடுகளில் 07 செலவின விடயங்களுக்கு ஏற்புடையதாக ரூபா. 11,460,000 தொகை முற்றுமுழுதாக எஞ்சியிருந்தது. | 2021 ஆம் ஆண்டில் நிலவிய கொவிட் 19 காரணமாக தவிர்க்க முடியாத காரணங்களின் மீது அலுவலக நடவடிக்கைகள் மட்டுப்படுத்தப்படுதல், கேட்கப்பட்ட எல்லா கட்டுநிதிகளும் கிடைக்கப்பெறாமை போன்றன இந்த ஒதுக்கீடு எஞ்சுவதற்கு காரணமாகியுள்ளது. | தற்போதுள்ள நிலைமைகளின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ள ஒதுக்கீடுகள் ஆகக் கூடியதாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்விற்கான ஆண்டில் ஒதுக்கீடு செய்திருந்த தேறிய ஒதுக்கீடுகளில் 11 செலவு விடயங்களுக்கு ஏற்புடையதாக ரூபா.619,920,621 தொகை உபயோகப்படுத்தாது எஞ்சியிருந்ததுடன், அது தேறிய ஒதக்கீட்டில் 25% தொடக்கம் 91% வரையிலான எல்லைக்குள் காணப்பட்டது. | - அதே - | - அதே - |
| (இ) | நிதி ஒழுங்குவிதி 66 பிரகாரம், ஒவ்வொரு செலவு விடயங்கள் மூலம் ஒதுக்கீடுகளை வேறு செலவு விடயங்களுக்கு மாற்றப்பட்டிருப்பினும், அவ்வாறு மாற்றப்பட்டிருந்த ஒதுக்கீடுகளிலிருந்து 03 சந்தர்ப்பங்களில் மொத்தம் ரூபா.143,979,702 ஆன ஒதுக்கீடுகள் எஞ்சியிருந்ததுடன், அது 56% தொடக்கம் 100% வரையிலான எல்லைக்குள் காணப்பட்டது. | 2021 ஆம் ஆண்டில் நிலவிய கொவிட் 19 நிலைமை மீது ஏற்பட்ட தவிரக்க முடியாத காரணங்கள் மீது, அலுவலக நடவடிக்கைகளை மட்டுப்படுத்தல் மற்றும் செலவினங்களுக்கான இரசீதுகள் சமர்ப்பிக்கப்படாமை. | நி.ஒ.விதி 66 இன்கீழ் மாற்றும் ஒதுக்கீடுகளை அகக் கூடியதாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல். |
| (ஈ) | நிதி ஒழுங்குவிதி 50 பிரகாரம், கணக்கு கொடுக்கும் அலுவலரால் மதிப்பீடுகளை இயன்ற வரை முழுமையாகவும் செவ்வையாகவும் தயாரிக்கப்பட்டுள்ளது என்பதற்கும் சிக்கனம் மற்றும் வினைத்திறன் தொடர்பாக உரிய கவனத்துடன் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளது என்பதற்கும் பொறுப்பாக இருத்தல் வேண்டும். ஆயினும் அமைச்சின் 15 செலவு விடயங்களுக்கு ஏற்புடையதாக ரூபா.200,000 தொடக்கம் ரூபா.4,760,000 ஆன எல்லைக்குள் செலவு மதிப்பீடுகளை திருத்தங்களுக்கு உட்படுத்தியிருந்ததுடன், அது 40% தொடக்கம் 190% வரையிலான எல்லைக்குள் காணப்பட்டது. | நி.ஒ.விதி 66 இன்கீழ் ஒதுக்கீடுகளை ஏற்பாடு செய்தல் இந்த மாற்றங்களுக்கு காரணமாகியுள்ளது. | ஏற்படக் கூடிய ஏற்றத்தாழ்வுகளை கவனத்தில்கொண்டு ஆகக் குறைந்த திருத்தங்களுக்கு உட்படும் வகையில் மதிப்பீடுகளை தயாரிப்பதற்கு பொறுப்பாக இருத்தல் வேண்டும். |

## 3. தொழில்பாட்டு மீளாய்வு

### 3.1 வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கு வழங்கும் அலுவலரின் அபிப்பிராயம் | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) 2020 ஆம் ஆண்டில் ஏற்பட்ட கொவிட் 19 தொற்று நோய் நிலைமை காரணமாக பாடசாலைகள் மூடப்பட்டன. அதன் காரணமாக கல்வி நடவடிக்கைகளுக்கு தடைகள் ஏற்பட்டதால் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை தொடர்ச்சியாக பராமரிப்பதற்கு, “குரு கெதர” கல்வி நிகழ்ச்சித்திட்டம் ஒளிபரப்பு செய்யும் பொருட்டு 2020 மற்றும் 2021 ஆண்டுகளில் ஒழுங்குமுறையில் ரூபா.மில்லியன் 28.6 ம் ரூபா.மில்லியன் 198.3 ம் என்ற வகையில் ரூபா.மில்லியன் 226.9 ஐ தேசிய ரூபாவாகினியிடம் செலுத்தப்பட்டிருந்தது. ஆயினும், இந்த நிகழ்ச்சித்திட்டத்தை பாடசாலை மாணவர்கள் எவ்வளவு பேர் பார்வையிட்டனர் என்பது தொடர்பாக பின்னாய்வு செய்து அமைச்சினால் நிகழ்ச்சித்திட்டத்தின் பயன் தொடர்பான மதிப்பீடு செய்திருக்கவில்லை. | இலங்கை பாடசாலைகளின் கல்விக்காக தொலைதூர கல்வி தொடர்பான சுற்றறிக்கை மற்றும் வழிகாட்டல்களில் சுற்றுநிருப இலக்கம் 15/2021 மற்றும் 2021.07.19 ஆம் திகதிய, படிவ இலக்கங்கள் 2-7 மூலம், நிகழ்ச்சித்திட்டங்களை பார்வையிட்ட மாணவர்களின் எண்ணிக்கை தொடர்பான தகவல்கள் முறையாக பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது | ஒளிபரப்பும் கல்வி நிகழ்ச்சித்திட்டங்களின் விளைத்திறனை பின்னாய்வு செய்து குறைந்த உற்பத்தி திறன் மட்டம் இருப்பின் பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல். |

| | | |
|---|---|---|
| (ஆ) 2021 வரவு செலவு திட்டத்தின் கீழ் பிராந்திய தகவல்கள் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப கல்வி நிலையங்களில் “e தக்ஷிலா” கற்கை முகாமைத்துவ முறைமையின் பயன்பாட்டுக்காக இராஜாங்க அமைச்சினால் 09 மாகாணங்களில் மாகாண கல்வி திணைக்களங்களில் கலைக்கூடங்களை நிருமாணிக்கும் பிரேரணைக்காக உபகரணங்களை கொள்வனவு செய்திருப்பினும், அறிக்கையின் திகதி வரை 05 மாகாணங்களில் கலைக்கூடங்கள் தாபிக்கப்படாமை காரணமாக அந்த மாகாணங்களிடம் வழங்கியிருந்த செலவினம் ரூபா .15,273,225 ஆன உபகரணங்கள் பயனற்று காணப்பட்டன. | 2022.04.26 ஆம் திகதிய 03/2022 ஆம் இலக்க தேசிய வரவு செலவு சுற்றறிக்கை மூலம் உள்நாட்டு நிதியை பயன்படுத்தி மேற்கொள்கின்ற கருத்திட்டங்களுக்கு ஏற்புடையதான செலவினம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. ஆகையால் இப்பணிகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருப்பினும், இந்த நிலைமை இயல்பு நிலைக்கு வந்த பின்னர் உரிய பணிகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | செலவிடப்பட்டுள்ள நிதியத்தின் ஊடாக நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வதற்கும், கொள்வனவு செய்திருந்த உபகரணங்களின் உத்தரவாதக் காலம் முடிவடைவதற்கு முன்னர் தாமதமின்றி உரிய உபகரணங்களை பயன்படுத்துவதற்கும் துரிதமாக செயற்படல் வேண்டும். |

## 3.2 பெறுகைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கு வழங்கும் அலுவலரின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்விற்கான ஆண்டுக்கு ஏற்புடையதாக முன் தேவைகளை அடையாளம் காணப்பட்டு பெறுகை திட்டத்தில் உள்ளடக்காது ரூபா.மில்லியன் 3.2 பெறுமதியான அலுவலக உபகரணங்களைக் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | பெறுகை திட்டம் தயாரிக்கும் சந்தர்ப்பத்தில், அந்த அலுவலக உபகரணங்களின் தேவைகளை அடையாளம் காணப்படவில்லை என்பதுடன், திருத்தம் செய்யப்பட்ட பெறுகை திட்டம் தயாரிக்கும் சந்தர்ப்பத்தில் தவறுதலாக இந்த அலுவலக உபகரணங்களுக்கு ஏற்புடையதான தகவல்களை உள்ளடக்குவதற்கு இயலவில்லை. | திருத்தம் செய்யப்பட்ட பெறுகை திட்டம், எல்லா கொள்வனவுகளும் உள்ளடங்கும் வகையில் தயாரிக்கப்படுதல் வேண்டும். |

## 4. மனித வளங்களின் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கு வழங்கும் அலுவலரின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| பிரதி பணிப்பாளர் (திட்டமிடல்) பதவியில் பதில் கடமையாற்றுவதற்கு முறையான நியமனக் கடிதம் வழங்கப்படாது 2020 நவம்பர் 30 ஆம் திகதி மேல் மாகாண கல்வி திணைக்களத்தின் பிரதி கல்வி பணிப்பாளர் (திட்டமிடல்) பதவியில் கடமைகளை நிறைவேற்றுவதற்காக அலுவலர் ஒருவரை நியமனம் செய்திருந்ததுடன், அன்றைய திகதி தொடக்கம் அறிக்கையின் திகதி வரை எந்தவொரு படியும் செலுத்தப்படவில்லை. | இந்த அலுவலர் மாகாண கல்வி பணிப்பாளரின் 2020.11.30 ஆம் திகதிய கடிதம் மூலம் இந்த அமைச்சிடம் தற்காலிகமாக இணைக்கப்பட்டுள்ளதுடன், உள்ளக இணைத்தல் என்ற தலைப்பில் ED/RFF/02/01/01 மற்றும் 2020.12.04 ஆம் திகதிய கடிதம் மூலம் அமைச்சு செயலாளரால் கல்வி சீர்திருத்த பிரிவின் பிரதி கல்வி பணிப்பாளர் பதவியில் கடமைகளை நிறைவேற்றுவதற்காக இந்த அலுவலரை நியமனம் செய்யப்பட்டுள்ளது. அதேபோன்று முறையான நியமனக் கடிதம் வழங்குவதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. | முறையான நியமனக் கடிதத்திற்கமைவாக பதில் கடமையாற்றும் நியமனம் மேற்கொள்ளுதல் வேண்டும். |